I.A.221/2017 in O.S.30/2017 ம.சா.1 துரைராஜா த/பெ துரைசாமி

17.06.2022 குறுக்கு விசாரணை

நான் எஸ்.எஸ்.எல்.சி படித்துள்ளேன். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரியும். புரிந்துக் கொள்ளவும் தெரியும். என்னுடைய வம்சாவழியினர் எந்த இடத்தில் பாரம்பரியமாக வசித்து வந்தார்கள் என்றால் தற்போது நான் வசித்துவரும் இடத்தில் தான் அவர்களும் வசித்தார்கள். மூன்று தலைமுறையாக அங்கு வசித்து வந்தார்கள். எனக்கு விவரம் தெரிந்து என் தாய் வழி பாட்டி அங்கு தான் இருந்தார். நான் சொல்வது தவறு என்றும், தற்பொழுது நான் வியாபாரம் செய்யும் இடம் நான் விலை கொடுத்து வாங்கிய இடம் என்று சொன்னால் அது தவறாகும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் இருக்கும் இடத்தை விலை கொடுத்து வாங்கியதாக சொல்லப்பட்டிருந்தால் அது தவறாகும். அவ்வாறு பிரமாண வாக்குமூலத்தில் எந்த இடத்திலும் நான் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்யும் அனைத்து வழக்குகளையும் நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்வேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தற்போது எனக்கு நினைவில்லை படித்து பார்த்தால் நினைவு வரும். மனுச் சொத்தினை நான் விலை கொடுத்து வாங்கவில்லை. வேறு ஒரு சொத்தினை விலை கொடுத்து வாங்கி உள்ளேன். அந்த சொத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பேயே வாங்கிய சொத்தாகும். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், நான் இருக்கும் இடத்தை செட்டியார் சமூகத்திற்கு சொந்தமான சொத்து என்று சொல்வதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாச் சொத்தினை நான் வாங்கியதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாவாச் சொத்தை விலைக்கு வாங்கியதாக சொல்லியிருந்தால் அது தவறாகும். பிரமாண வாக்குமூலத்தை நான் சரியாக படிக்காமல் கையெழுத்து செய்துவிட்டேன். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து மனுக்களும், எதிர்மனுக்களும் நான் சரியாக படிக்காமல் தான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 20ல் சொல்லப்பட்டுள்ள மலர்கொடி என்பவர் தான் எதிர்மனுதாரருக்கு பணம் கொடுத்து இந்த வழக்கை தாக்கல்செய்ய சொல்லியிருந்தார். ரூ.50,00,000/- அவர் கொடுத்ததை நான் பார்த்தேன். அந்த பணத்தை மலர்கொடி கடையில் வைத்துதான் கொடுத்தார். என் கடையும், மலர்கொடியின் கடையும் சுமார் 50 அடி தொலைவில் உள்ளது. பண பரிமாற்றத்தின் போது பணம் ரொக்கமாக கொடுக்கப் பட்டது. அதை நான் பார்த்தேன். பழைய 500 ரூபாய் தாளை கட்டுகளாக வைத்து கொடுக்கப் பட்டது. மலர்கொடி கடை கேஷ் கவுண்டரில் வைத்து அந்த பணம் கொடுக்கப்பட்டது. பணம் கொடுத்தபோது என்னை மலர்கொடியின் கடைக்கு அழைத்ததால் சென்றேன். மலர்கொடியின் தந்தை என்னை கடைக்கு அழைத்தார். அவரது பெயர் எனக்கு நினைவில் இல்லை. சாட்சி மீண்டும் சொல்கிறார் நாகரத்தினம் என்று அவர் தற்போது உயிருடன் தான் உள்ளார். அவர் என்னுடைய நண்பர் ஆவார். அவர் என்னுடைய நண்பர் என்பதால் அவருடைய பெயர் சற்றென்று என் நினைவுக்கு வரவில்லை என்றால் சரிதான். எனக்கும், மேற்சொன்ன நாகரத்தினத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் இந்த வழக்கிலிருந்து நான் தப்பிப்பதற்காக மேற்கண்ட தவறான தகவலை சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கடையின் பெயரை தற்போது பாம்பே ஸ்டோர்ஸ் என்று பெயர் மாற்றம் செய்து அரசு அனுமதியுடன் நடத்தி வருகிறேன். வழக்கு தாக்கல் செய்தபோது அந்த கடையின் பெயர் ஓம் சரவணா ஸ்டோர்ஸ் என்று இருந்தது. வழக்கு தாக்கல் செய்தபோது என் பெயரில் உள்ள கடையை மேற்கொண்டு கட்டுமானம் செய்யக்கூடாது என்று என் பெயரில்

தடை உத்தரவு பெறப்பட்டு இருந்தது என்றால் சரிதான். என்னுடைய கடையான பாம்பே ஸ்டோர்ஸின் மேல் புறத்தில் கட்டுமானம் நடைபெற்று வருகிறது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பும் அவ்வாறு எந்த கட்டுமானமும் நடைபெறவில்லை.

(எதிர்மனுதாரர் கட்டுமானம் பற்றிய புகைப்படம் தாக்கல் செய்வதற்காக வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)